**அறிவாற்றல் சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டம் - 2014**

அறிவாற்றல் சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2007 திசெம்பர் 18 ஆந் திகதிய 2371 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02(ஏ) ஆம் பிரிவு மற்றும் 0091-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

அறிவாற்றல் சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் படி, கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஊழியர் சந்தை தேவைகளுக்கான அதிகரித்த இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் தொடர்பை அதிகரித்தலின் மூலம் கல்விகற்ற இளைஞர்களின் வேலை வாய்ப்பை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவாகும். செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவானது இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியின் தரம், பொருத்தத்தன்மை, செயலாற்றல், மற்றும் அவற்றை அணுகுவதிலுள்ள சமத்துவம் என்பவற்றை மேம்படுத்தல் ஆகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,267 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 105 மில்லியனானதுடன், அதில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 6,955 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 65 மில்லியன் கடனாகவும் ரூபா 1,605 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 15 மில்லியன் மானியமாகவும் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் செயற்பாடுகளை 2008 மார்ச் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. 2014 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய ஆசிய அபிவிருத்தியின் கடிதத்தின்படி, கடனின் பூர்த்தியாக்கல் திகதி 2014 ஒக்தோபர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் மானியத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2014 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன்

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைநான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான கல்வித் துறையின் மத்திய நிறுவனங்களுக்கான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத்

தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியம் போன்றவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியம் போன்றவற்றின கீழ் வழங்கப்பட்ட நிதிகள்,பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,மற்றும்

(ஐ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்தகாலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றனஎன்றும்,

(ஆ) வழங்கப்பட்டநிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் பேது | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொ மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ஐ.அ.டொ மில் | ரூபா. மில் |
| ஏடிபீ –கடன் | 65.00 | 6,955.00 | 1,647.40 | 1,513.24 | 58.54 | 6,264.19 |
| -மானியம் | 15.00 | 1,605.00 | 370.60 | 331.92 | 15.00 | 1,737.27 |
| இலங்கை அரசாங்கம் | 25.32 | 2,707.00 | 320.00 | 478.43 | 25.32 | 3,587.79 |
| மொத்தம் | **105.32** | **11,267.00** | **2,338.00** | **2,323.59** | **98.86** | **11,589.25** |

### 3.2 பௌதீக செலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் செயற்திட்ட நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபடாத மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூட திறப்புவிழாவிற்கான செலவுகளை ஈடுசெய்வதற்காக 37 பாடசாலைகளுக்கு ரூபா 10.90 மில்லியன் தொகையான முற்பணம் வழங்கப்பட்டது. மேலும், அதன் மீது ஏற்பட்ட உள்ளபடியான செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு எந்தவித ஆதாரமான ஆவணங்களை பெற்றுக்கொள்ளாமல் அத்தகைய முற்பணங்களில் தீர்ப்பனவு

செய்யப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் ஊழியர் பயிற்சியின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது 2008 இலிருந்து ''பாடசாலை வலை'' வலையமைப்பினூடாக 1724 பாடசாலைகளுக்கும் கல்விசார் நிறுவனங்களுக்கும் இணைய செய்முறைகளை வழங்கியிருந்ததுடன் ரூபா 835 மில்லியன் தொகை கணனிகள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களை வழங்குவது தொடர்பில் செலவு செய்யப்பட்டிருந்தது. 2011 இலிருந்து 2014 வரை வழங்கப்பட்ட முறைமையின் வினைத்திறனை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 813.9 மில்லியன் கூட்டுத்தொகையான தொலைபேசிக் கட்டணங்கள் ஏற்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. முறைமையின் மந்தமான செயற்பாடு மற்றும் தொடர்ச்சியான செயலொழிவு காரணமாக பெரும்பாலான பாடசாலைகள் வலையமைப்பை பயன்படுத்தவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 64 மில்லியன் கிரயத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கல்விசார் முகாமைத்துவ தகவல் முறைமையும் ''பாடசாலை வலை''யின் நலிவான பயன்பாட்டினால் செயற்பாடற்றிருந்தது.

(இ) ஊழியப் பயிற்சி மற்றும் பிரசுரித்தல் காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தி மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூட திறப்புவிழாவினை பிரசுரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 1.2 மில்லியன் தொகையான விளம்பரச் செலவினம் செயற்திட்ட நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை.